“ போட்டியும் பொருமையும் மலிந்துவிட்டன ”

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (18—5—50) வெளியூர் (19—5—50) [இதழ் 255

பிரிவினை மனப்பான்மை பலம் பெற்றுவருகிறது

இளைஞர்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்கவேண்டும்

“காங்கிரசைப் பலப்படுத்த வாரீர்”

—(0)—

ஊழியர்களிடையே பட்டேலின் உபதேசமும் பரதவிப்பும்

“ காங்கிரஸ்காரர்களிடையே போட்டியும், பொருமையும் காணப்படுகிறது. தலைவர்கள் எனப்படுவோரெல்லாம் ஊழியர்களாலேயே ஆக்கப்பட்டவர்கள். ஆகவே, தலைவர்களைச் சரிப்படுத்தவேண்டியது ஊழியர்கள் கடமை ”

“ இந்தியா பல சாதி, பல மதம், பல இனம் நிறைந்ததொரு பெரிய நாடு. குறுகிய அரசியல் மனப்பான்மை, தனி மாகாண கோரிக்கை முதலியன இக்காலத்தில் அதிகரித்துவிட்டன. மேலும், சேவைகளை அதிகரித்துக்கொண்டே போகும் பண்பும் வளர்ந்துவிட்டது. தனி மாகாணம் வேண்டும் என்று கோருவது சரியேயாயினும், அதற்கு இது காலம் அல்ல அதற்குரிய காலம் வரும்போது அதனை கவனிக்கலாம் ”

“ இந்தக் காலத்தில் போலீசாரைத் தாக்குவதுபோன்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இந்நிலையில், அப்படிப்பட்ட இளைஞர்களைத் தக்க வழியில் அழைத்ச் செல்ல வேண்டியது காங்கிரஸ்காரர் கடமை. ஒரு சுதந்திர நாட்டில் எல்லாவற்றுக்கும் போலீசையே நம்பி இருத்தல் கூடாது நம்மை நாமே சரிப்படுத்திக்கொள்ள முயலவேண்டும் ”

மலபார் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசும்போது, மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளார் சர்தார் பட்டேல்.

அவர் ஊழியர்களுக்குச் செய்யும் உபதேசத்திலிருந்து காங்கிரசின் சூழல்கள், நாட்டு நிலை, இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள எழுச்சி ஆகிய உண்மைகள் வெளிப்படுகின்றன.

காங்கிரஸ்காரர்களிடையே
போட்டியும், பொருமையும
காணப்படுகிறது.

இதுதான் இன்றைய காங்கிரசின் நிலை என்பதை, நன்கு உணர்ந்திருக்கிறார் பட்டேல். தலைவர்களெனப்படுவோரெல்லாம், ஊழியர்களின் உதவி கொண்டே வாழவேண்டிய நிலையிலுள்ளனர் இன்று தலைவர்கள் தவறு செய்தால், அதனைக் கண்டித்துத் திருத்த வேண்டியவர்கள் ஊழியர்களே என்பது அவர் தம் கருத்து இக்கருத்துக்கு மற்றோர் காரணமும் இருக்கலாம். தலைவர்களின் நிலை தடுமாறுமலிருக்க ஊழியர்களின் உதவி அவசியம்!

ஆகவே, ஊழியர்களைத் தட்டிக்கொடுத்தாலன்றி காங்கிரஸ் வாழ முடியாது என்ற காரணத்தாலோ என்னவோ, ஊழியர்களுக்கு உயர்வு கொடுத்துப் பேசுகிறார் போலும்! பேசட்டும்; ஆனால் அதே நேரத்தில் மாற்று கருத்துக்களனைத்தையும் மட்டந்தட்டவும் முயலும் அவரது போக்குதான் விந்தையாயிருக்கிறது. ஊழியர்களுக்கு அவர் தரும் உபதேசத்தினிடையே, “இந்தியா பல சாதி பல மதம், பல இனம் கொண்ட நாடு” என்ற உண்மையையும் அவரே ஒப்புக்கொள்ளுகிறார்.

ஒப்புக்கொள்ளுகிறாரேயன்றி, அந்த ஒப்புதலுக்கு ஏற்றபடி அமையவில்லை அவருடைய அடுத்த வாசகங்கள். தனி மாகாணப் பற்று அதிகரித்துவிட்டது என்றும், அது ‘குறுகிய அரசியல்’ மனப்பான்மையின் ஏற்... என்றும் ... அவர். இக்குற்றச்சாட்டு சரிதானா என்பதை ஆராய்வோம்.

சாக்கடை நாற்றம் ஒருபுறம், குப்பைக்கூளங்கள் ஒருபுறம், இவற்றிலிருந்து வெளிக்கிளம்பும் ஈக்கள் கொசுக்கள் முதலியவற்றின் தொல்லை ஒரு புறம் என, பல வழிகளிலும் சுகாதாரத்துக்குக் கேடு பயக்கும் சூழ்நிலை இருக்கும்போது; அதனை போக்கும் முயற்சி இல்லாதபோது, நோய்கள் பரவுவதை எங்ஙனம், யார்தான் தடை செய்ய இயலும்?

அதுபோலவே, பல சாதி, பல மதம், பல இனம் உள்ள ஒரு பரந்த நாட்டில் மக்களிடையே ஒன்றுபட்ட மனப்பான்மையை எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்? அது முடியாதபோது ‘குறுகிய அரசியல் மனப்பான்மை’யுடையோர் என்று ஒரு சாராரைத் தூற்றுவது எப்படி நீதியாகும்?

இந்தியா என்றுமே ஒரே நாடாக இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. அதற்குக் காரணம் இயற்கையே அன்றி வேறொன்றுமில்லை. இந்திய இயற்கையிலேயே இன, கலாச்சார அடிப்படைகளில் பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறது. இதனை மாற்றி, ஒன்றுபடச்செய்வது இயலாத காரியம். எனவேதான், வர்க்கத்துக்கோர் வட்டாரம் தேவை என்கின்றனர் அரசியல் அறிந்த அறிஞர்கள். அப்படிக் கூறுவது, பட்டேலின் அகராதி

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. பலம்பெற ரஷியாவின் ஒத்துழைப்பு தேவை

யு. எஸ். உதவி பிரதிநிதி கிராஸ் கூறும் யோசனை

நியூயார்க், மே. 19—

ஐ. நா.வில் ரஷ்யர்களை மீண்டும் சேரும்படி செய்வது எப்படி என்பதுபற்றி ஒரு யோசனையை, லேக்ஸக்ஸஸில் யு எஸ். உதவிப் பிரதிநிதியான எர்னஸ்ட் கிராஸ் வெளியிட்டிருக்கிறார்.

அவர் கூறுவதாவது:—ஐ. நா. ஸ்தாபனம், அதனுடைய ஏஜென்ஸிகள் இவை உருப்படியான நிர்மான வேலையில் ஈடுபடவேண்டும். சீனப் பிரதிநிதித்துவம் விஷயமாக சமாதானம் என்ற முறையில், தாஜா போக்கில் இறங்கிக்கொண்டிருக்கக்கூடாது. நிர்மான வேலைகளில் சிரத்தைக் காட்டுவதின்மூலம் உலகத்தின் சக்திவாய்ந்த ஸ்தாபனமாக ஐ நா.வைச் செய்ய முடியும். அப்பொழுது ரஷ்யா இந்த ஸ்தாபனத்தை அலட்சியம் செய்யமுடியாது. அதுவும் சேர்ந்து பாடுபட்டால் ஸ்தாபனத்தின் பலம் அதிகரிக்கும்.

செவிட்டுக் குழந்தைகளுக்கு கல்வி

நியூயார்க்கிலுள்ள செவிடர்களுக்கான லெக்ஸிங்டன் ஸ்கூல், 250 காது கேட்காத சிறுவர், சிறுமியர்களுக்கு டெலிவிஷன் மூலம் கல்வி போதனை அளித்து வருகிறது. அமெரிக்காவிலேயே மிகவும் நீண்ட காலமாக இந்த ஸ்தாபனம் சேவை செய்து வருகிறதாம். (குளோப்)

இந்தியா - பாக்கிஸ்தான் அமைச்சர்கள் சந்திப்பு

புதுடில்லி, மே 17 —

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் நியமிக்கப்பட்டுள்ள புது மைனாரிட்டி மந்திரிகளான தோழர் ஸி. ஸி. பிஸ்வாஸும், டாக்டர் ஏ. எம். மகாலிக்கும் இன்று கல்கத்தாவில் சந்திக்கின்றனர்.

நேரு, லியாகத் ஒப்பந்தப்படி மைனாரிட்டிகளினிடையே நம்பிக்கை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதுபற்றிய திட்டத்தை, இவர்கள் வகுப்பர் எனத்தெரிகிறது.

கலகத்தை அடக்கிய பின்னரே வெளியேறுவார்களாம்!

மலேயாவுக்கு சுதந்திரம் வழங்குவது பற்றி லார்ட் லிஸ்டோவல்

லண்டன், மே 17—

இந்தியாவுக்களித்ததுபோல் மலேயாவுக்கும் சுதந்திரமளிப்பதே எங்கள் நோக்கம். காமன்வெல்தகுட்பட்ட சுயாட்சியைப் பெறும்படி தயார் செய்துகொள்ளும்படியே மலேயர்களைக் கேட்டுக்கொள்கிறோம் என்று ராஜாங்க மந்திரியாக மலேயாவுக்குச் சென்று வந்த லார்ட் லிஸ்டோவல் குளோப் நிருபருக்களித்த பேட்டியில் கூறினார்.

ஆகவே, இப்பொழுது மலேயாவிலுள்ள சட்டசபைகளுக்கு அதிக அதிகாரமும், பொறுப்பும் அளிப்பதன்மூலமே சுயாட்சி பெறுவதற்கான சூழ்நிலை ஏற்பட வழிசெய்யப்பட்டு வருகிறது.

கலகத்தை ஒடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். கம்யூனிஸ்டுகள் நிர்வாகத்தைக் கைப்பற்ற முயலும் இச்சமயத்தில், நாங்கள் மலேயாவை விட்டு வாபஸாகப்போவதில்லை.

மேலும் அவர் கூறுகையில்,—கம்யூனிஸ்டுகளையும் கலகக்காரர்களையும் ஒடுக்குவதிலுள்ள கஷ்டங்களை விவரித்துவிட்டு அவைகள் சமாளிக்கப்பட்டு வருகின்றனவென்றும் கம்யூனிஸ்டுகளுக்கு முன்போல் இப்பொழுது வெளி உதவி சப்ளை கிடைக்கமுடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

திபேத்திற்கு ஆயுதம் வழங்கல்

—(0)—

யு. எஸ். இந்தியாவுக்கிடையே எவ்வித உடன்படிக்கையும் இல்லையாம்

—(0)—

மாஸ்கோ ரேடியோ கூற்றுக்கு மறுப்பு

புதுடில்லி, மே 17—

திபேத்திற்கு கல்கத்தா வழியாக யு. எஸ். ஆயுதங்களை அனுப்ப, இந்தியாவிலுள்ள யு. எஸ். ஸ்தானிகருடன் பிரதம மந்திரி பண்டித நேரு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார் என்று மாஸ்கோ ரேடியோ வெளியிட்ட செய்திக்கு எவ்வித ஆதாரமுமில்லை என்று, இந்திய அயல்நாட்டு மந்திரி காரியாலய வட்டாரங்களில் கூறப்படுகிறது.

திபேத்தின் தலைநகரான லாஸாவுக்கு அமெரிக்க ஆயுதங்கள் சப்ளைசெய்வதை மேற்பார்வையிட, ஒரு அமெரிக்கக் கோஷ்டிகூட கல்கத்தா வந்திருக்கிறது என்ற பிரேக் செய்தியை மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பியதாம்.

லெபனீஸ் அகதிகள் உண்ணாவிரதம்

பீரட், மே 17—

தென் லெபனானில் போதிய உணவின்றி வாடும் அகதிகள், ஐ. நா. நிவாரண ஸ்தாபனம் சுறுசுறுப்பாக வேலை செய்யாததைக் கண்டித்து உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கின்றனர். தென் பிரதேச போலீஸ் அதிகாரிகள் இவ்விஷயத்தை லெபனீஸ் சர்க்காருக்கு அறிவித்திருக்கின்றனர். நிவாரண உதவி துரிதப்படுத்தப்படும் வரையில், இந்த உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து நடத்த அகதிகள் முடிவு செய்திருக்கின்றனர்.

மலேயா கலகத்தை அடக்கும் முயற்சி

வீரத்தில் மிகவும் பிரபலமாக உள்ள கூர்க்கா ஜாதியினர் படையை, மலேயா கலகத்தை ஒடுக்க உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக குளோப் நிருபர் கூறுகிறார். யுத்தத்தின்போது இப்படையினர் ஜப்பானியருக்கெதிராக உபயோகிக்கப்பட்டனர்.

—

பாக்தாத், மே 17—

இராக்கில் விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தியை விளக்கும் ஒரு கலர் பிலிம் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மாலை மணி

சென்னை 18—5—50 வியாழக்கிழமை

பக்தியும்-பைத்தியமும் (2)

பக்தியில் கொண்டிருக்கும் மோகம், பக்தர்களைப் பைத்தியக்காரர்களாக ஆக்கிவிடுகிறது என்பதற்கு எடுத்துக் காட்ட வேண்டுமானால், இயற்பகை நாயனார்-சிறுத்தொண்ட நாயனார் — குங்கிலியக்கலய நாயனார் — கோட்புலி நாயனார் போன்றவர்களின் புராணக் கதைகளேபோதுமான சான்றுகளாகும்.

சம்பந்தரை பிடித்திருந்த பக்தி, சமணர்கள் மீது பொருமைகொள்ளச் செய்தது; அவர்களைக் கண்டபடியெல்லாம் திட்டவைத்து; அவர்களில் எண்ணாயிரம் பேரைக் கழுவேற்றச் செய்தது!

அப்படிப்பட்ட நாயன்மார்களைப் பிடித்த நோய், இப்பொழுது மந்திரி பக்தவத்ஸலனாரைப் பிடித்திருக்கிறது! சுருங்கச்கூற வேண்டுமானால், பக்தவத்ஸலனார் 'நவீன சம்பந்தரா'கக் காட்சியளிக்கிறார்; சம்பந்தர் எப்படி சமணர் மீது பொருமைகொண்டு இழிமொழிகள் பேசி, இழிசெயல்கள் புரிந்துவந்தாரோ, அப்படியே பக்தர் பக்தவத்ஸலனாரும் பகுத்தறிவியக்கத்தார் மீது பொருமையுணர்ச்சி கொண்டு, காரணமில்லாமல் இழிமொழி பேசிவருகிறார்! சமணம் அழிந்து சைவம் தழைக்க வேண்டுமென்பது எப்படி சம்பந்தரின் குறிக்கோளாக இருந்ததோ, அப்படியே பகுத்தறிவு அழிக்கப்பட்டு மூடபக்தி வளரவேண்டுமென்பது பக்தவத்ஸலனாரின் குறிக்கோளாக இருந்து வருகிறது--பக்தியின் முதிர்ச்சி! என் செய்வது!

கற்பனைக் கடவுளின் பேரில் நேரம், நினைப்பு, உழைப்பு, அறிவு, ஆற்றல்களைச் செலவழித்துப் பாழாக்காமல், அவற்றை உருவானபலனளிக்கும் பகுத்தறிவு வழியில் செலவழியுங்கள்-வாழ்வை வளமாக்குங்கள் - இன்பம் ஏற்படச் செய்யுங்கள் என்றுதான், பகுத்தறிவியக்கத்தினர் பிரசாரம் செய்து வருகின்றனர். மக்களின் சமுதாய வாழ்வில் பொதிந்து கிடக்கும் மூடநம்பிக்கை, குருட்டுப்பழக்கவழக்கம், மூடபக்தி ஆகியவற்றை அகற்றி, வாழ்வை அறிவுடம்பட்டதாக ஆக்க வேண்டும் என்று கூறிவருகிறார்கள். இவற்றைப் பல்லாயிரம்தடவைகள் எடுத்துக் கூறினாலும் கூட சில மரமண்டையினர் மூளையில் புகவில்லை, அவர்களுக்குப் புரியவுமில்லை!

பகுத்தறிவியக்கத்தாரின்பிரசாரம் இப்படி பகுத்தறிவுக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தும், பக்தர் பக்தவத்ஸலனார் கூறுகிறார், **"ஸ்ரீ ரங்கநாதர், நடராஜரை பிளக்க வேண்டுமென சிலர் கூறுகிறார்கள்"** என்று. பகுத்தறிவியக்கத்தாரை மனதில் நினைத்துக்கொண்டுதான் மந்திரியார் இப்படிக் கூறுகிறார் நடராஜர், ரங்கநாதரைப்பிளப்பதுதான தங்கள் கொள்கை அதுதான் குறிக்கோள் என்று, எங்கு, பகுத்தறிவியக்கத்தார் கூறினார்கள்? நடராஜரைப் பற்றியும், ரங்கநாதரைப்பற்றியும் மக்களிடம் பரப்பியிருக்கும் கற்பனைக் கருத்துக்களைக் கண்டிக்கின்றனரேயல்லாமல், நடராஜரைப்பிளப்பது அவர்களுடைய கொள்கையல்லவே! அதுதான்கொள்கையென்றால், எத்தனையோ நடராஜர்கள் பிளவுண்டிருப்பார்களே! நடராஜரையும், ரங்கநாதரையும் கண்காட்சிசாலையில் வேடிக்கைப் பார்த்து மகிழவேண்டியபொருள்களாக வைக்க வேண்டுமென்றுதான் பகுத்தறிவியக்கத்தார் கூறுகிறார்கள். இந்தத் தெளிவுணர்வுகூட பெருமல் பக்தவத்ஸலனார் பேசியிருப்பது விந்தையாகத்தானிருக்கிறது!

பக்தசிரோன்மணி பக்தவத்ஸலனார், மேலும் பேசுகிறார். நடராஜரைப் பிளப்பதைப்பற்றிக்கூட அவர் அவ்வளவு கவலைப்படவில்லையாம். அவர்மீது பாடப்பெற்றுள்ள பாமாலைகளைக் கொளுத்துவதென்றால் அதை அந்த 'பக்தர்' அனுமதிக்கவே முடியாதாம்! அகோர சொரூபம் தாங்குகிறார் மந்திரியார்! மூடநம்பிக்கையையும், குருட்டுப் பழக்கவழக்கத்தையும்புகுத்தி, மக்களின் அறிவைக் கெடவைக்கும் பாழ்பட்டக் கருத்துக்களை வெறுக்கிறோம் என்ற வெறுப்பின் அறிகுறியாக, அக் கருத்துக்களைத் தாங்கிநிற்கும் புராண ஏடுகளைத் தீயிலிடுகிறோம் என்றுதான் பகுத்தறிவியக்கத்தினர் கூறினர். தீயிலிடுதல் என்பது வெறுப்பின் அறிகுறியேயல்லாமல், கொளுத்துவது என்பதுதொழிலல்ல என்று, பகுத்தறிவியக்கத்தினராகிய நாம் கூறிவந்தோம்-கூறிவருகிறோம். காங்கிரஸ்காரர்கள் சீமைத் துணிகளைக் கொளுத்துவதை எப்படி வெறுப்பின் அறிகுறிச் செயலாக கருதினார்களோ,அப்படியேதான் புராணக் குப்பைகளைப்பொசுக்குவதுஎன்பதை வெறுப்பின் அறிகுறியாகக் கொண்டிருக்கிறார்கள் அறிவியக்கத்தார். அவர்கள் கலையை எதிர்க்கவில்லை, கலைதாங்கிநிற்கும் பாழ்பட்ட கற்பனைக் கருத்துக்களைத்தான் எதிர்க்கிறார்கள், இதைச் சரிவரபுரிந்துகொள்ளமுடியாத பக்தவத்ஸலனார் ஏதேதோ புலம்புகிறார்- கொளுத்துவதை அனுமதிக்க முடியாது என்று ஆவேசங்கொள்கிறார்! புராணக் கருத்துக்களை ஆதரிக்க அவருக்கு எவ்வளவு உரிமையுண்டோ. அவ்வளவு உரிமை அவைகளை வெறுப்பதற்குப் பகுத்தறிவாளர்களுக்கும் உண்டு! இந்த அடிப்படை நிலையை, ஏனோ அமைச்சர் உணர மறுக்கிறார். தாம் கொண்டிருக்கும் பக்தியைக் காட்ட, அவர் பல அறிகுறிகளை மேற்கொள்வதுபோல, தாம் கொண்டிருக்கும் வெறுப்பைக் காட்ட, பகுத்தறிவாளர்கள் பல அறிகுறி செயல்களைமேற்கொள்கிறார்கள். இதில் என்ன தவறு! இந்த செயல்களில் பலாத்காரம் இருந்தால், அரசாங்கம் சட்டம் கொண்டு தடுக்கட்டும். அப்படிக்கில்லாமல், அமைதியான முறையில் அறிவியக்கப்பிரசாரம்செய்யும் பகுத்தறிவியக்கத்தாரைப் பற்றி, ஏதேதோ நினைத்துக் கொண்டு, என்னென்னமோ கூறுகிறார், ஒன்றிற்கொன்று பொருத்தமில்லாத வகையில், பக்தர் பக்தவத்ஸலனார்.

பகுத்தறிவியக்கத்தார்சொல்வதைப் புரிந்துகொள்ளாமலும் புரிந்துகொள்ள முயற்சி செய்யாமலும் ஏதேதோ உளறிக் கொட்டுவது என்றால், அவர்களைப்பற்றி எக்கொலிகொட்டி நகைக்கத்தானே இடமேற்படுகிறது

பகுத்தறிவியக்கத்தாரைப் பற்றி மேலும் கூறும்போது. **"அவர்கள் எதையாவது பேசிக்கொண்டு அத்துடன் நின்றால் மனிதனின் கீழ்தர உணர்ச்சி கிளப்பப்படுகிறதெனக்கூறி வேடிக்கை பார்க்கலாம், ஆனால் பேச்சோடு நிற்காமல் கொளுத்துவோமென்றால் அதை அனுமதிக்கவே முடியாது"** என்று குறிப்பிட்டுள்ளார். "அனுமதிக்கவே முடியாது"-அதிகார ஆணவ பீடத்திலிருந்தும் அமைச்சர் என்ற தோரணையில் கூறிப்பார்க்கிறார்! அதிகார பீடத்திலிருந்துதான் அவரால் அப்படிக் கூறமுடிகிறதேயல்லாமல், அறிவுடைமை பீடத்திலிருந்தா கூறமுடிகிறது! தன் அதிகாரத்தின் எல்லையை அளந்து பார்க்கிறார் அமைச்சர்! ஐயோ பாவம்!

அத்துடனில்லாமல் **"மனிதனின் கீழ்த்தர உணர்ச்சி கிளப்பப்படுகிறதெனக்கூறி! வேடிக்கை பார்க்கலாம்"** என்றும் கூறுகிறார். கீழ்த்தர உணர்ச்சிகள் கிளப்பப்படுவதை வேடிக்கைப்பார்ப்பதில் அமைச்சருக்கு எவ்வளவு ஆர்வம்! வேடிக்கை பார்ப்பாராமே வேடிக்கை! கீழ்த்தர உணர்ச்சிகளிலே வேடிக்கை காண விரும்புகிறார் பக்தர் பக்தவத்ஸலனார்! பக்தியின் மகிமையே மகிமை!

இராமாயணத்திலுள்ள 'ரஸ'ங்களைப் பருகுவதில், பக்தர்பக்தவத்ஸலனாருக்கு ஆசை அதிகம் எனத் தெரிகிறது! அவரே கூறுகிறார்கேளுங்கள். **"ராமாயணக் கதை ருசி போல் வேறொன்றுமில்லை. ஈடு இணையற்ற காவியமது"** இதுதான் பக்தவத்ஸலனாரின் பாகுமொழி! இராமாயணக் கதை ருசிக்கிறதாம்! ஏன் ருசிக்காது, ரஸங்கள்தான் கம்பரால் ஏராளமாகச் சேகரித்துவைக்கப்பட்டிருக்கிறதே! ருசி எந்த அளவுக்கு அமைச்சரைக் கவர்ந்திருக்கிறதென்றால், இராமாயணத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, அது கவர்ந்துவிட்டது! கீழ்த்தர உணர்ச்சிகள் கிளப்பப்படுவதைக் கண்டு வேடிக்கை பார்க்க விரும்பும் 'பக்தருக்கு' இராமாயணம் இனிக்காமல் எப்படிப்போகும்!

கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளப்புவது பக்திக் காவியங்களா அல்லது பகுத்தறிவாளர் இலக்கியங்களா என்பது இரண்டையும் ஒத்திட்டுப் பார்ப்போருக்குத்தானே விளங்கும்! கம்பராமாயணம் போன்ற 'தெய்வீக'க் காவியங்களில் கலக்கப்பட்டிருக்கும் கீழ்த்தர உணர்ச்சிகளைக் கூறுவதுதான், பகுத்தறிவாளர்களின் இலக்கியங்களேயல்லாமல், கிளப்புவனல்ல! அமைச்சர் இனியேனும் இவ்வுண்மையை அறிந்துகொள்ள முயலட்டும், பொய் புனைசுருட்டை நீக்கி நல்லறிவு பரப்பும் இலக்கியங்கள்தாம் பகுத்தறிவியக்கத்தாரின் இலக்கியங்களாகும். தோழர் பக்தவத்ஸலனார் பக்தி முதிர்ந்திருக்கும் வேளையில் இதைப்புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், வெப்பம்குறைந்து, பக்தியும் குறைந்து காணப்படும் நேரத்திலாவது உண்மை நிலை அறிந்து, தெளிவடைவார் என்று எண்ணுகிறோம்.

தலைவன் தூக்கிலிடப்பட்டால்...?

கிழக்கு இந்தோனேஷ்யாவில் கலகம் மூளும்

லண்டன், மே 17 — இப்பொழுது துரோகக் குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு வரும்மக்கர் கலகப்படைத் தலைவன் அஸிஸ் மரண தண்டனை விதிக்கப்பட்டு, தூக்கிலிடப்பட்டால்கிழக்குஇந்தோனேஷ்யாவில் கலகம் மூளலாம் என்று மாஞ்செஸ்டர் கார்டியனின் ஜகார்தா நிருபர் கூறுகிறார்.

இந்தோனேஷ்யாவைச் சேர்ந்த பலதீவுகளில் அமைதியின்மை இருந்துவருகிறதென்றும், இவை ராணுவப் பாதுகாப்புகோரிவருகிறதென்றும், பிரஸிடென்ட் சுகர்ணாவும் பிரதமர் ஹட்டாவும் இப்பொழுதுள்ள குழப்பமான நிலைமையை சீர்படுத்த முயற்சி செய்து வருகின்றனர் என்றும் ஆனால், இந்நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்றும் அவர் கூறுகிறார்.

மக்கட் தொகை கணக்கெடுப்பு

1951 பிப்ரவரி 9-ல் ஆரம்பம்

புதுடில்லி, மே 17 — அடுத்த ஆண்டு மார்ச்1-ந் தேதிக்குள் புது ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பு தயாராகிவிடும்.

1951 பிப்ரவரி மாதம் 9-ந் தேதியிலிருந்து மார்ச் மாதம் 1-ந் தேதி வரையில் இந்தியா முழுவதிலும் 10 லட்சம் ஜன சங்கியை கணக்குப் ப[illegible] செல்வார்கள். அ[illegible] செய்வார்கள். இவ்வளவு பிரமாண்டமான அவ்வேலையை இந்தியா ஒரு தேசம் தான் நடத்துகிறது. வெறும் ஜன சங்கியை மட்டுமின்றி ஒவ்வொருவரின் பொருளாதார சமூக நிலை, கல்வி தொழில் பற்றிய தகவல்களும் விசாரிக்கப்படும். மொத்தம் 70 கோடி தகவல்கள் அந்த ஜன சங்கியை கணக்கில் அடங்கியிருக்கும். இத்தொகுப்பு மேற்கொண்டு விசாரணைகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

போட்டியும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் குறுகிய மனப்பான்மை என்றுகுறிக்கப்பட்டிருந்தால், அதற்கு யார்தான் என்ன செய்யமுடியும்?

அடுத்தபடியாக, தற்காலத்தில் இளைஞர்கள் போலீசாரைத் தாக்குவது போன்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகிறார்களாம். அப்படிப்பட்டவர்களைக் காங்கிரஸ்காரர்கள் தாம் சரிப்படுத்த வேண்டுமாம். எல்லாவற்றுக்கும் போலீசை நம்பியிருப்பது கூடாதாம். அதுதான் சுதந்திர நாட்டின் இலட்சணமாம்.

ரொம்ப சரி, இளைஞர்கள் சிலரின் அப்படிப்பட்டசெயலை நாமும் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆனால், தோழர் பட்டேலின் வாதம் எந்த அளவுக்குப் பயனுள்ளவாதமாகும் என்பதுதான நமக்குப் புரியவில்லை. எல்லாவற்றிற்கும் போலீஸ் உதவியை நாடக்கூடாதென்று, பட்டேல் போன்ற நாடாளும் மந்திரிகள் கூறுகின்ற இந்த நேரத்தில்தான், நாட்டிலே போலீஸ்தர்பார் தடபுடலாக இருக்கிறது. அதுமட்டுமா? ஆட்சியாளர் மக்களின் உதவி அவசியம் என்பதையே மறந்துவிட்டு எடுத்ததற்கெல்லாம் சட்டத்தின் துணையும், அந்தச் சட்டத்துக்குப் போலீஸ், சிறை, துப்பாக்கி என்ற பிறவற்றைத் தேடுகிறார்களென்றால், எங்ஙனம் நாட்டு மக்களிடையே—சிறப்பாக இளைஞரிடையே ஆட்சிமுறையில் பற்று அன்போ, ஒத்துழைப்பு மனப்பான்மையோ இருக்க முடியும்? இதனை எண்ணிப்பார்க்க வேண்டாமா? ஊழியர்களுக்கு உபதேசம் செய்துவிட்டு, ஆள்வோர் மட்டும் தம் மனம்போன போக்கில் நடப்பதுதான் சுதந்திர ஆட்சியா?

முடிவு தவருனல்...?

மூன்ருண்டுகளில்போர்

லண்டன், மே 17— இப்பொழுது தவருன முடிவுகள் செய்யப்பட்டால், அல்லது சரியான முடிவுகளே செய்யப்பட்டு, அவை நிறைவேற்றப்படாமல் போனால் இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் மூளுவது உலகயுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று, மூவர் மாநாடு பற்றி 'டெய்லி மெயில்' எழுதியிருக்கிறது.

பட்டேலின் வருத்தம்!

எர்ணகுளம், மே 16— "எனது மலையாள விஜயம் என்றென்றும் எனது நினைவில் இருக்கும். இளமையிலேயே மலையாளத்துக்கு விஜயம் செய்யாமற்போய்விட்டேனே என்று வருந்துகிறேன்."

— சர்தார்பட்டேல்

வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழு தேர்தல் கூட்டம்

புதிய செயற்குழுவினர் தேர்தல்

மாவட்ட மாநாடு ஜூன் 24, 25, தேதிகளில் நடைபெறும்

வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது

ஆரணி, மே 16—

13-5-50 சனிக்கிழமையன்று மாலை 4 மணிக்கு ஆரணி கணேசர் ரேடியோ நிலையத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத்திலிருந்து 21 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

1950 51 ஆண்டிற்கு கீழ்கண்டவர்கள் செயற்குழுவினராகத் தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர்:-வேலூர் கே. சுப்பிரமணியம்; துணைச்செயலாளர்கள்:- வி. டி. அண்ணாமலை வந்தவாசி; எஸ். என். அண்ணாமலை கனகம்பூர்.

பொருளாளர்:-ப. உ. சண்முகம், திருவண்ணாமலை. விசேஷ உறுப்பினர்:- ஈ. தர்மலிங்கம், திருவண்ணாமலை.

மாவட்ட அமைப்பாளர்களாகக் கீழ்க்கண்டவர்களை நியமித்திருக்கிறது

குடியாத்தம், திருப்பத்தூர், வாணியம்பாடி:-ப. துரை அரசன், குடியாத்தம்.

ஆரணி, வேலூர்:—பொ. பாலகிருஷ்ணன், ஆரணி.

வாலாஜா, அரக்கோணம்:—கா. பொன்னம்பலம், ஆர்க்காடு.

வந்தவாசி, செய்யாறு:—வி. டி. அண்ணாமலை, வந்தவாசி.

திருவண்ணாமலை, போளூர், செங்கம்:-எஸ். என். அண்ணாமலை, கனகம்பூர்.

மாவட்ட மாநாட்டை ஆரணியில் ஜூன் 24, 25 தேதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டது. மேற்படி மாநாட்டிற்கு வரவேற்புக் குழு கீழ்க்கண்டபடி தீர்மானிக்கப்பட்டது.

வரவேற்புக்குழு தலைவர்:— கே. பி. சுந்தரம், ஆரணி. செயலாளர்:— பாலகிருஷ்ணன், ஆரணி; துணைச்செயலாளர்: வி. டி. அண்ணாமலை, வந்தவாசி. பொருளாளர்:-புலவர் கோவிந்தன், திருவத்திபுரம். விசேஷ உறுப்பினர்:—ஆர். குட்டி, ஆரணி.

வரவேற்புக்குழு உறுப்பினர்கள்:- போளூர் கே. சுப்ரமணியம், கோவிந்தன், சேத்துப்பட்டு. ப. உ. சண்முகம், தர்மலிங்கம் திருவண்ணாமலை. குருசாமி, சோர்பசந்தல், காமதேவ், தண்டராம்பட்டு, வடிவேலு, முல்லைக்கொம்பை, ம. தேசன், திருப்பத்தூர். துரை அரசன், சாரங்கபாணி, குடியாத்தம். எம். பி. சாரதி, பாதா கிருஷ்ணன், வேலூர். பொன்னம்பலம், ஆர்க்காடு. சீனிவாசன், ராணிப்பேட்டை. சஞ்சீவி, அரக்கோணம். ஜமாபசாமி, திருமால்பூர் சி. வே. சுப்பராயன், திருவத்திபுரம். மா. நா. இராசமாணிக்கம், திருவத்திபுரம். கே. ஏ. வடிவேலு, அம்மையப்பட்டு தங்கவேலு, வந்தவாசி. சி. ஜெயராமன், டி. எத்திராஜ், ஆரணி

மேற்கண்டவர்களை மாநாட்டின் வரவேற்புக் குழு உறுப்பினர்களாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புலவர் கோவிந்தன், வி. டி. அண்ணாமலை நன்றிகூற, கூட்டம் இனிது முடிவுற்றது. (செ-ர்)

“தேன்கூடு”

திருமங்கலம், மே 14—

திருமங்கலம் ரத்னா அச்சகத்தின் உரிமையாளரான கு. ப. ம. தர்மன் பி. காம்., அவர்கள் “தேன்கூடு” என்ற மாத வெளியீட்டின் ஆசிரியராகவும், பிரசுரிப்பவராகவும் 11-5-50-ம் தேதி மதுரை அடிஷனல் டிஸ்டிரிக் மாஜிஸ்டிரேட் முன் தன்னைப் பதிந்துகொண்டார்,

---

எல்லாம் இரவல் மயம்!

சினிமா நடிகையின் சிறப்பு!

பாரிஸ், மே 17—

ஒரு பிரெஞ்சுப்படத்தில் கதாநாயகி பாடவேண்டிய காதல் பாட்டொளுக்கு, தாம் இரவல் கொடுத்த மேரிஜோஸ் என்கிற பாடகி, தன் பெயரை இரவல் கொடுத்ததாக அப் படத்தில் விளம்பரப்படுத்தவில்லை என்று, நஷ்டஈடு கோரி வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

மிஸ்ஜோஸ் கூறுகையில், கதாநாயகியாக நடித்த நடிகைக்கு குரல் இரவல் கொடுத்தது தான் என்றும், படம் ஆவதற்கு அவரைப் போல உள்ள ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்றும், நிர்வாணமாக தோன்றவேண்டிய இடத்தில் அவர்மாதிரி சிலை வைத்துப் படம் எடுக்கப்பட்டதென்றும் எல்லா விஷயத்திலும் அந்நடிகையிடம் சொந்தச் சரக்கு எதுவும் இல்லை என்று தெரிவித்தார்.

அப்பிரஞ்சு நடிகையின் பெயர் மிராய்கோஸ் ஆர்னும் என்பதாம்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

கோவையில் மே மாதம் 27-28 தேதிகளில் நடைபெற இருக்கும் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் டீ கடை, வெற்றிலைபாக்குகடை சோடாகடை புக்ஸ்டால் வைக்க விரும்பும் தோழர்கள், 22—5—50க்குள் மாநாட்டு அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கவும். பின்னால் வருபவை கவனிக்கப்பட மாட்டாது.

மாநாட்டிற்குத் தொண்டர்களாகச் சேரவிரும்புவோர், அந்தந்த வட்டத்தைச்சேர்ந்த தி. மு. கழகச் செயலாளரின் நற்சான்றிதழுடன் 20-5-50-க்குள் 8-20, ஜயில் ரோடில் அமைந்திருக்கும் மாநாட்டு அலுவலகத்தில் தொண்டர் படைத்தலைவரிடம் நேரில் பதிவு செய்துகொள்ள வேண்டும். தொண்டர்கள் தி. மு. க. உறுப்பினர்களாக இருக்க வேண்டும். 20—5—50-க்குப் பிறகு தொண்டர்களாகப் பதிவு செய்யப்படமாட்டாது.

இதற்குக் கோவைநகரிலும், சுற்றுப்புறங்களிலுமுள்ள தொண்டர்களே எதிர்பார்க்கப்படுகிறார்கள். வெளியூரிலிருந்து தொண்டராகப் பதிவு செய்துகொள்ளும் தோழர்கள் பயிற்சி வகுப்பு இருப்பதால் தங்கள் சொந்தச் செலவில் இருந்து பயிற்சி பெற வசதியுள்ளவர்கள், பதிவு செய்து கொள்ளுதல் நலம்.

தங்களன்புள்ள
கே. அ. ராசமாணிக்கம்
செயலாளர்

அலுவலகமுகவரி:—
8/20 ஜெயில்ரோட் கோவை

மேற்கு ஐரோப்பா பாதுகாப்புத் திட்டம்

லண்டன், மே 16—

மேற்கு ஐரோப்பாவின் தரைப்படை, விமானப் படையை எவ்வளவு சீக்கிரம் அதிகரிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதிகரிக்க ஒரு இரகசியத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதை 12 அட்லாண்டிக் ஒப்பந்தநாடுகள் பரிசிலனை செய்து வருகின்றன.

லண்டனில் நடைபெறும் அட்லாண்டிக் நாடுகள் கௌன்ஸில் கூட்டத்தில் வட அட்லாண்டிக் ராணுவ சேனாதிபதி நியமிக்கும் விஷயமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ரஷ்யர்கள் 1953 பூரணமாக ராணுவ பலத்தைத் திரட்டி விடுவார்கள் என்று நம்பப்படுவதாகவும், அதற்குள் மேற்கு நாடுகள் படை பலத்தைப் பெருக்கவே இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது

லண்டனில் நடைபெறும் இக்கௌன்சில் கூட்டத்தில் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, இதலி, பெல்ஜியம், ஹாலந்து, லக்சம்பர்க், நார்வே, டென்மார்க், ஐஸ்லாந்து, போர்ச்சுகல் இவை கலந்துகொண்டிருக்கின்றன

‘ரேடியோ ஆக்டிவ்’ கண்ணாடிகள்

லண்டன், மே 17—

பாத் என்ற இடத்தில் விற்கப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடிகளில், ‘ரேடியோ ஆக்டிவ்’ குணம் இருப்பது தெரிய வந்ததின் பேரில், நகர அதிகாரிகள் அவைகளை எல்லாம் சேகரித்து பூமிக்குள் புதைத்து விட்டனர். இந்தக் கண்ணாடி ஒரு குழந்தையை கொன்றுவிடக் கூடிய அளவுக்கு ரேடியோ ஆக்டிவ் சக்தி பெற்றிருந்ததாம்.

இக் கண்ணாடிகள், யுனைடெட் ஸ்டேட்ஸ்ராணுவத்தினரிடமிருந்து தட்டிக் கழிக்கப்பட்ட பொருள்களோடு சேர்த்து வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. இவை யு. எஸ். ராணுவ மோட்டார்களில் ரிப்ளெக்டர்’ கண்ணாடிகளாக உபயோகிக்கப் பட்டவையாம்.

குதிரைப் பந்தய ‘ரெபரி’ காமிரா

லண்டன், மே 17—

குதிரைப் பந்தயத்தில் ஒவ்வொரு குதிரையும் எந்த வரிசை முறையில் வருகிறது என்பதையும், பந்தய ஓட்டத்தை முடிக்க எவ்வளவுநேரம் ஆகிறது என்பதையும் கண்டுபிடித்து சொல்லஒரு காமிரா கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கோவை

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில்

27-5-50 சனியன்று

நகைச்சுவை அரசர்

என். எஸ். கிருஷ்ணன்

அவர்களின்

“வள்ளுவர் வரலாறு”

வில்லுப்பாட்டு அரங்கு நடைபெறும்

வரவேற்புக்குழுவினர்

கிரிக்கெட் நிபுணர் லார்வுட் ஆஸ்ரேலியா வருகிறார்

ஸிட்னி, மே. 17—

பிரபல பிரிட்டிஷ் கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டக்காரராக இருந்த ஹெரால்ட் லார்வுட் தன் குடும்பத்துடன் ஆஸ்திரேலியாவுக்கு வருகிறார்.

இவர் இங்கிலாந்திற்காக 21 டெஸ்ட் மாட்சுகளில் ஆடியிருக்கிறார் 1933ல் கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து விலகியபின், எவ்வித கிரிக்கெட் ஆட்டம் என்பதையும் இவர் பார்க்கவில்லையாம். இவர் இங்கு நடைபெறும் முதல் டெஸ்ட் பந்தய ஆட்டத்தைப் பார்க்க திட்டம் போட்டிருக்கிறார்.

ரஷ்யா போருக்குத் தயாராக இல்லையாம்!

லண்டன், மே. 17—

1938-39-ல் என்ன நிலைமை இருந்ததோ, அதே நிலைமை இப்பொழுதும் இருப்பதை இப்பொழுது தென்கிழக்கு ஆசியாவில் காணலாம் என்று டெய்லிமெயில் நிருபர் பாங்காக்கிலிருந்து எழுதுகிறார்.

ரஷ்யா இப்பொழுது யுத்தத்திற்குத் தயாராக இல்லாததினால் கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்டுகள் அதிகாரம் விஸ்தரிக்க இப்பொழுது முயற்சி செய்யமாட்டார்கள் என்று அவர் கூறுகிறார்.

தென்கிழக்கு ஆசியா விஷயமாக ஸிட்னி மாநாட்டின் விளைவாக இப்பிரதேசத்தில் சித்தைந்து கொண்டிருக்காமல் அடங்கிய கமிட்டி ஏற்படுத்தப்படலாம் என்று அவர் கூறுகிறார். (குளோப்)

லண்டன், மே 17—

எகிப்திய மன்னர்கள் சவம்அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறையில், சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த கோதுமை, இப்பொழுது விதையாக உபயோகிக்கப்பட்டதில் நிறைய விளைச்சலைக்கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

தெ. கி. ஆசியாவுக்கு கடன் நிதி

லண்டன், மே 17—

தென்கிழக்கு ஆசியாவுக்கென்றே ஒரு கடன் நிதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், இதிலிருந்து தேவையான தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பணம் கடனாக வழங்கப்படவேண்டும் என்றும் இதற்கான நிதியை தென்கிழக்கு ஆசியா நாடுகள் ஒவ்வொன்றும் கொடுக்க வேண்டும் என்றும் ஆஸ்திரேலியா ஒரு யோசனையைக் கூறியிருக்கிறது.

இந்த நிதிக்கு மூலப்பணம் ரூ. 13 கோடி முதல் ரூ. $19\frac{1}{2}$ கோடி வரையில் வேண்டும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த யோசனை இங்கு பிரதிநிதிகளை கவர்ந்திருக்கிறது.

பெரியம்மைக்கு மருந்து

லண்டன், மே 17—

வைத்தியத்துறையில் புரட்சிகரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய அற்புத மருந்து ஒன்றைச் சில விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இது பெனிஸிலினை விட உயர்ந்ததென்றும், பெரியம்மை, இன்புளுயன்ஸா வகை, இன்னும் பல வைரஸ் சின்ன அம்மை முதலிய வற்றைக் குணப்படுத்தும் சக்தி இதற்கு உண்டென்றும் கூறப்படுகிறது. புற்றுநோய்க்கு மருந்து கண்டு பிடிப்பதற்காக ஷெ விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்துகையில் இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. மாத்திரைகளாகவும், திரவ ரூபத்திலும் இது கூடிய சீக்கிரம் எல்லா மருந்துக் கடைகளிலும் விற்பனைக்கு வருமென்று தெரிகிறது. இதற்கு ‘வி எப்9’ என்று தற்காலிகமாகப் பெயரிடப்பட்டிருக்கிறது.

சிவப்பு இந்தியர்களுக்கு உரிமை வழங்கல்

கனடா திட்டம்

ஆட்டவா, மே 17—

சிவப்பு இந்தியர்களுக்கு இப்பொழுதுள்ள சட்டப்படி வோட்டுரிமை கிடையாது. ஒயின், பீர் போன்ற மது வகைகளையும் குடிக்கவும் கூடாது. இவர்களுக்குச் சில உரிமைகள் வழங்க கனடா சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறது என்றும், அது விஷயமாக சிவப்பு இந்தியத் தலைவர்களின் அபிப்ராய கோஷ்டியை, சந்திக்கத் தான் தயாராக இருப்பதாகவும் கனடா பார்லிமெண்டில் பிரதமர் லாரெண்ட் அறிவித்தார்.

அநேக சிவப்பு இந்தியர்கள் ஜனநாயக உரிமை தங்களுக்கு வேண்டாம் என்றே கூறுகின்றனர். ஏனெனில் உரிமை கொடுக்கும் போது தங்களிடமிருந்து வரி கேட்கப்படும் என்பது அவர்களுக்குத் தெரியும். இப்பொழுது சிவப்பு இந்தியர்கள் எவ்வித வரியையும் கொடுப்பதில்லை.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

19 - 5 - 50

காஞ்சிபுரம் :—என். வி. நடராசன்

20—5—50

அகரம்சேரி :—இரா. நெடுஞ்செழியன்.

21 - 5 - 50

ஆற்காடு :—இரா. நெடுஞ்செழியன், என் வி. நடராசன்.
குடியேற்றம் :—க. அன்பழகன்.
கடலூர் :—சி. பி. சிற்றரசு.
மேலக்கோட்டையூர், சின்னையாபுரம் :—இரா. சு. தங்கப்பழம் எம். எஸ். சிவசாமி

திரா. மு. கழகக் கட்டிட நிதிக்காக

20-5-50 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு

சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில்

சி. என். ஏ. எழுதிய வ. ரா. எழுதிய

கல்சுமந்தகசடர் :: வழக்குவாபஸ் :: அகல்யா

என்னும் மூன்று நாடகங்கள் நடைபெறும்

தோழர்கள் காஞ்சி. மணிமொழியார், க. அன்பழகன், என். வி. நடராசன், வி. முனுசாமி, கே. ஏ. மதியழகன், கே. எம். கண்ணபிரான், பி. வி. முத்துசாமி, கே. டி. பழனியப்பா, சி. வி. ராஜன், டாக்டர் கணேசன், அரங்கண்ணல், கே. ராஜகோபால், ஆர். எம். சாமி, கோ. இறைமுடிமணி. மற்றும் பல தோழர்களும் நடிப்பர்.

கட்டணம்: 3, 2, 1. (வரியுள்பட) "மாலைமணி" அலுவலகத்தில் காலை 10-மணி முதல் டிக்கட் விற்கப்படும். நாடக தினத்தன்று தியேட்டரில் காலை 10 மணி முதல் டிக்கட்டு விற்கப்படும்.

மலானின் இன வட்டார மசோதா

எதிர்ப்பு அதிகரித்ததால் ஒத்திப்போடப்படுகிறது

ஜோஹென்னஸ்பர்க், மே 17—

மலானின் இனமண்டல மசோதா தென்னாப்பிரிக்க பார்லிமெண்டின் இந்த செஷனில் நிறைவேறுது ஒத்திப் போடப்படுவது நிச்சயம் என்று கூறப்படுகிறது.

இம்மசோதாவில் ஒவ்வொரு இனத்தினரும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில்தான், வசிக்கவேண்டும் என்று கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தென்னாப்பிரிக்கா இந்தியர்பிரச்னை சம்பந்தமாக வட்டமேஜை மாநாடு கூடி, முடியும்வரை இந்த மசோதாவை ஒத்திவைக்கும்படி இந்திய-பாகிஸ்தான் சர்க்கார்கள் வற்புறுத்தியதற்கேற்ப, இம்மசோதா ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதாம் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதைத்தவிர மசோதா ஒத்திவைப்புக்கு, இன்னும் பல காரணங்கள் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. தென்னாப்பிரிக்க பார்லிமெண்ட் மூன்பு இந்த செஷன் முடிவதற்கு நிறைவேற வேண்டிய காரியம் ஏராளமாக இருப்பதும், ஹேக் சர்வதேசக் கோர்ட்டில் தென்னாப்பிரிக்க சர்க்காரின் பிரதம சட்ட ஆலோசகர் இல்லாத படியதும் இந்த ஒத்திவைப்புக்குக் காரணமாக இருக்கலாம்.

மிகவும் செல்வாக்குள்ள பத்திரிகையான 'ஸ்டார்' இம்மசோதாவை அடியோடு கைவிடும்படி கேட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இம்மசோதாவைத் தொடர்ந்து நிறைவேற்றினால் வட்டமேஜை மாநாடு நடைபெறாமலேயே போய்விடும் என்று அப்பத்திரிகை எச்சரிக்கிறது.

இந்தியர்கள் 60 ஆண்டுகாலமாக யூனியனில் அனுபவித்துவந்த வறுமைகளை இம்மசோதா பறிக்கிறது என்று, டிரான்ஸவால் இந்தியர் ஸ்தாபனம் கண்டித்திருக்கிறது.

இம்மசோதா நிறைவேறினால் இந்தியர்கள் நிலைமை அதோகதிஎன்று, மந்திரி டோங்ஜெஸுக்கு இந்திய வர்த்தக சங்கம் தந்தி அடித்திருக்கிறது.

கோடம்பாக்கம் ஹைரோடு மயானம் மூடப்படும்

சென்னை, மே 16—

கோடம்பாக்கம் ஹைரோடில் உள்ள மயானம் குடியிருப்புப் பிரதேசத்துக்குமத்தியில் இருப்பதால், அதை மூடிவிட வேண்டுமென்ற கார்ப்பரேஷனின் கோரிக்கைக்கு சர்க்கார் சம்மதம் அளித்துவிட்டனர்.

தெ. கி. ஆசியாவுக்கு உதவி

ரூ.5850 கோடி செலவில் 10 ஆண்டுத் திட்டம்

லண்டன், மே 17—

தென்கிழக்கு ஆசியாவின் அபிவிருத்திக்காக 10 ஆண்டுத் திட்டத்தில் ரூ. 5850 கோடி செலவிட வேண்டும் என்றும், அப்பொழுது தான் மக்களின் வாழ்க்கைத்தரம் உயருவதுடன், ஜனநாயகத்தையும் காப்பாற்ற முடியும் என்றும், ஸிட்னி மாநாட்டில் நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனராம்.

வலியில்லாமல் பிரசவிக்கும் பெண்

ஸிட்னி, மே. 17—

பெர்த் நகரைச்சேர்ந்த மிஸஸ் கணிக்குக் என்ற பெண் 9 குழந்தைகளுக்குத் தாயாக இருக்கிறாள். இதுவரை எந்த பிரசவத்திற்கும் வலி எடுக்காமலேயே அவளுக்குக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன.

இது டாக்டர்களுக்கு இன்னும் ஒரு பெரும்புதிராக இருந்து வருகிறது. ஒரு நிமிஷம்கூட தனக்கு வலி எடுக்கவில்லை என்றும் பிள்ளை பெறுவது ஒரு இன்பமாகவே இருக்கிறதென்றும் அவள் கூறுகிறாள். —ஏ.பி.

ஜலவாயு குண்டினிடமிருந்து பாதுகாப்பு

ஸ்டாக்ஹோம், மே. 17—

அணுகுண்டு படமின்றி ஜலவாயுகுண்டினிடமிருந்தும் தப்பித்துக்கொள்ள 'க்ரனேட்' போன்ற மிக உறுதியான கற்களைக் கொண்டு பாதாளக்குகைகளை அமைக்கும் திட்டம் இங்கு வகுக்கப்பட்டிருக்கிறது. பூமியில் 60 அடி ஆழம் வரை கட்டப்படும் இந்த பாதாளக் குகையை கட்டி முடிக்க ரூ. 32—8—0 கோடி செலவாகுமாம். யுத்தம் ஏற்பட்டால் ஸ்டாக்ஹோமில் இருக்கும் அந்தஸ்து விசேஷமான 300,000 பேர்கள் இதில் பாதுகாப்பாயிருக்குமாம். அவசியமற்ற 400000 பேர் ஸ்டாக்ஹோமிலிருந்து வெளியேற்றப்படுவர்.

ஜார்டன் விவகாரம்

கெய்ரோ, மே. 17—

ஜார்டனுடன் கிழக்கு பாலஸ்தீனம் இணைக்கப்பட்டதினால், ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க அரபுலீக் ஒரு மாத அவகாசம் எடுத்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறது. இதற்குள் சமாஸத்திற்கு ஏதாவது வழி இருந்தால், அது முயற்சிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

ஜார்டன் அரபு லீக் சாஸனத்திற்கு விரோதமாக நடந்துகொண்டிருப்பதால் அதை அரபுலீகிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்கிற எகிப்து தீர்மானத்திற்கு மெஜாரிட்டி ஆதரவு கிடைத்திருக்கிறது. என்றாலும், இந்த வெளியேற்றும் முடிவை தீர்மானிக்க வேண்டியது லீக் அஸெம்பிளியே தான். ஆகவே ஆசியாவின் கமிட்டிக் கூட்டம் ஒத்திபோடப்பட்டு ஜூன் 12-ந்தேதி லீக் அஸெம்பிளி கூட்டம் கூட்டப்படவிருக்கிறது.

இராக்கும், எமனும் வெளியேற்றும் முடிவை ஆதரிக்காததால் இவ்விஷயமாக ஒத்திப்போடப்படுவதைத் தவிர வேறு வழி ஏற்படவில்லை.

ஜார்டன், கிழக்கு ஜார்டனை தர்மகர்த்தா முறையில் வைத்துக்கொள்ளும் யோசனைக்கு இணங்கத் தயாராக இல்லை.

இராக்கும், ஜார்டனை வெளியேற்றுவதை ஆதரிக்க தயாராகவே இல்லை. ஆகவே, இந்த சங்கடமான நிலைமை தீர வழியிருப்பதாகத் தெரியவில்லை.

பள்ளிகளில் மதக்கல்வி போதனை

ஒழித்துவிட சர்க்கார் முடிவு

சென்னை, மே 16—

1950-51ம் ஆண்டிலிருந்து சர்க்கார் பள்ளிக்கூடங்களிலும், ஸதல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களிலும் மதக்கல்வி போதனையை ரத்து செய்ய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

சர்க்கார் செலவில் மதக் கல்வி போதனை கூடாதென்று இந்தியஅரசியல் சட்டத்தின் 28 (1) வது ஷரத்து கூறுவதைப் பின்பற்றியே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கிறது.

இனி நடப்பவை

அரம்சேரி: 20—5—50 மாலை 6-மணிக்கு தி. மு. க. சார்பாக தோழர் வி. துரைசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் இரா. செழியன் எம். ஏ., என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஹிந்து சட்ட தொகுப்பு மசோதா திருத்தப்படும்

சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் சென்ற மாதம் புதுடில்லியில் கூட்டிய பூர்வாங்க மாநாட்டின் விளைவாக ஹிந்து சட்ட தொகுப்பின் பல்வேறு ஷரத்துகளுக்கு பல திருத்தங்கள் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளன.

உயிலில்லாத வாரிசுரிமை மாதர் சொத்துரிமை, விவாகம், விவாகரத்து அவிபக்த குடும்பம் முதலியவைகளிலே பிரதானமாக உள்ள இத்திருத்தங்கள் மாநாட்டில் பல்வேறு மெம்பர்கள் வெளியிட்ட யோசனைகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இவை அதிக தீவிரமாயிருக்காது எனவும் தெரியவருகிறது.

[illegible] பார்லிமெண்டு மெம்பர்களுக்கும் [illegible] கலந்துகொண்ட மற்ற மெம்பர்களுக்கும் அபிப்பிராயத்திற்காக அனுப்பப்பட்டுள்ளன.

பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்திற்குத் தேதி ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை என்றாலும் ஆகஸ்டு அல்லது செப்டம்பரில் கூட்டம் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புது அரசியலின்படி பார்லிமெண்டின் ஒரு கூட்டத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையே 6 மாதத்திற்கு மேல் ஆகக்கூடாது.

தற்கொலை

சென்னை, மே 16—

திருவல்லிக்கேணியைச் சேர்ந்த அப்பாத்துரை எனப்படும் சுமார் 40 வயதுடைய ஒருவரின் பிரேதம் இன்று காலை அடையாறு ஸெப் சாம்பவுண்டிலுள்ள ஒரு வேப்ப மரத்தடியில் கிடந்தது. மனைவியின் நடத்தை காரணமாக தற்கொலை செய்து கொண்டதாக தமிழில் எழுதப்பட்ட ஒரு கடிதம் பிரேதத்துக்குப் பக்கத்தில் கிடந்தது. மரக்கிளையில் ஒரு கயிற்றைக்கட்டி கழுத்தில் சுருக்கிட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

"ஏர் இந்தியா" இரவு விமான போக்குவரத்து

தொடர்ந்து நடைபெறும்

புதுடில்லி, மே 17—

டில்லிக்கும், பம்பாய்க்குமிடையே இரவு விமான சர்வீஸுக்கு பலத்த ஆதரவு இருப்பதால், இன்னும் 6 மாதத்திற்கு இரவு விமான சர்வீஸை தொடர்ந்து நடத்தும்படி 'ஏர் இந்தியா' அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

முதலில் விமான போக்குவரத்து போர்டு, இதற்கு முதலில் மூன்று மாத லைசென்ஸ்தான் அளிக்கப்பட்டது.

அமைச்சர் ஆண்டியாக விரும்புகிறார்

பர்மாவில் எல்லாத்தகராறுகளும் ஒரேயடியாக தீர்ந்துவிட்டால்தான் பௌத்த தீக்ஷை பெற்றுக்கொண்டு இலங்கையிலுள்ள பௌத்த ஆலயத்தில் சந்நியாசியாக தன் வாழ்நாளைக் கழிக்க விரும்புவதாக பர்மா பிரதமர் தாகின்-நு கூறினாராம். இத்தகவலை இலங்கை பத்திரிகைகள் இன்று தெரிவிக்கின்றன.

இலங்கையிலிருந்து புனித பௌத்த சின்னங்களுடன் பர்மா சென்ற இலங்கை பிக்ஷுக்கள் கோஷ்டியிடம் தான 12 மாதங்களுக்குள் பௌத்த சந்நியாசியாக முடியுமென நம்பிக்கை தெரிவித்திருப்பதாக பர்மா பிரதமர் கூறினாராம்.

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலை மணி"யை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
"மாலைமணி"

நெல்லை மாவட்டத்தில் கழகச் சொற்பொழிவு

திருநெல்வேலி மாவட்டத்தில் தோழர்கள் எம். எஸ். இராமசாமி, ச. சிவசங்கு, மணிமொழி, அறவேந்தன் ஆகியோர் கீழ்க்கண்டபடி கழகப் பிரசாரம் செய்வர்

20-5-50 ஏரல், 21, சிறுத்தொண்டநல்லூர், 22, சிவத்தையாபுரம், 24, தென்திருப்பேரை, 25, பாற்குளம், 26, கொற்கை.

அனுதாபம்

பள்ளிப்பட்டி, மே 17—

தத்திக்குளம் தோழர் டி. கே. முத்துசாமி 3-5-50-ல் இறந்ததை கேட்டு மிக்க வருந்துவதாயும், அன்னார் குடும்பத்தாருக்கும், குறிப்பாக அவர்தம் மனைவியாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதாக தோழர் பி. டி. என். மாரிமுத்து எழுதுகிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari-Chetty Street, Madras-1,